**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 75/2024**

**PW. 1**

**Date: 25.08.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சீனிவாசன் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | சங்கரன் | மதம் | |
| கிராமம் | கேளம்பாக்கம் | தொழில் | |
| வட்டம் | திருப்போரூர் | வயது | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the 25th **August 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. நான் மென்பொருள் நிறுவனத்தில் மனிதவள மேம்பாட்டு அதிகாரியாக வேலை பார்க்கிறேன். 1 மற்றும் 2 எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் இருவரும் சகோதரர்கள். 1 ஆம் எதிரி எங்கள் குடியிருப்பு பராமரிப்பு மேலாளராக 2020 – 2022 வரை பணிபுரிந்தார். 3 ஆம் எதிரி அவர்களின் அப்பா. 2020 – 2023 வரை நான் குடியிருப்பு சங்க பொருளாளராக பொறுப்பில் இருந்தேன். 1 ஆம் எதிரி பராமரிப்பு சம்பந்தமாக காசோலையில் கையொப்பம் வாங்குவதற்காக பொறுப்பாளர்கள் யாரும் அலுவலகத்தில் இல்லாத போது என்னை அடிக்கடி அழைப்பார்.

2. அவர் கேட்டுக் கொண்டதன் படி நான் கையொப்பம் செய்துவிட்டு வருவேன். இந்நிலையில் கடந்த 2020 ஏப்ரல் மாதம் 1 ஆம் எதிரி அவரது தொழில் சம்பந்தமாக அவருக்கு பணம் தேவைப்படுவதாகவும் எனவே ரூ.7 லட்சம் தனிநபர் கடன் பெற்று தரும்படி என்னை வற்புறுத்தினார். அவர் என்ன வேலை செய்து வருகிறார் என்று நான் அவரை கேட்டபோது அவரும் அவரது அண்ணன் 2 ஆம் எதிரி சிதம்பரத்தில் சாலை ஒப்பந்த பணி செய்து வருவதாக சொன்னார். நான் 1 ஆம் எதிரிக்கு கடன் கொடுக்க முயற்சி செய்கிறேன் என்று சொன்னேன்.

3. எனவே எதிரி அவ்வாறு நான் கடன் வாங்கிக் கொடுத்தால் அதை ஆறு மாதத்தில் அடைத்து விடுவதாகவும் மாதம் செலுத்த வேண்டிய தவணைத் தொகை ரூ.15,175/- யும் செலுத்துவதாக வாக்குறுதி கொடுத்ததால் நான் எனது வங்கியின் மூலமாக ரூ.7 லட்சம் கடன் பெற்று என்னுடைய வங்கிக் கணக்கிற்கு வந்த ரூ.6,89,101/- ஐ 16/04/2020 அன்று 1 ஆம் எதிரியின் வங்கிக் கணக்கான ஐ சி ஐ சி ஐ வங்கி கணக்கிற்கு பண பரிமாற்றம் செய்தேன்.

**ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d.K.Nilavarasan, 25.08.2025

District Munsif cum Judicial Magistrate,

Thiruporur.